**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஊத்தங்கரை .**

**முன்னிலை – திரு. து. சரவணன் பி.ஏ., பி.எல்.,**

குற்றவியல் நடுவர்,ஊத்தங்கரை

2026 – ஆம் ஆண்டு ஜீலை மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.183/2022**

**CNR:TNKI12-004634-2022**

அரசுக்காக:–

காவல் உதவி ஆய்வாளர்,
ஊத்தங்கரை காவல் நிலையம்,
குற்றஎண்.427/2024 ... குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1)பொன்னுராஜ் த/பெ.பொன்னுசாமி
2)தங்கராஜ் த/பெ.வீரன்
3)ரவி த/பெ.கோவிந்தன்
4)தம்பிதுரை த/பெ.கோவிந்தன் .... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கு 07.11.2022 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – 1 திருமதி. K. ஜெயந்தி அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.ராஜிவ்காந்தி அவர்கள் முன்னிலையாகி நடத்திட இரு தரப்பு வாதுரைக் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, நன்கு ஆராய்ந்த பின்னர் இன்று, இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்.

**தீர்ப்புரை**

கடந்த 09.08.2022 ம் தேதி காலை 11.00 மணியளவில் ஊத்தங்கரை சென்னப்பநாய்க்கனூர் கிராமம் பிள்ளையார் கோவில் அருகில் சாட்சி 1

மாயக்கண்ணன் என்பவரை எதிரிகள் அனைவரும் நிலப்பிரச்சனை சம்மந்தமான முன்விரோதம் காரணமாக டே தேவிடியா கண்டாரஓலி மகனே என கெட்டவார்த்தையால் திட்டியும் மேற்படி எதிரிகள் தங்கராஜ், ரவி, தம்பிதுரை ஆகிய மூவரும் சாட்சி 1 மாயக்கண்ணன் என்பவரை நகரவிடாமல் பிடித்து கொள்ள 1ம் எதிரி பொன்னுராஜ் சூரிகத்தியால் சாட்சி 1 மாயக்கண்ணனின் நெற்றியில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாக எதிரிகள் மீது ஊத்தங்கரை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இதச பிரிவுகள் 294(b), 342, 324 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரிகள் முன்னிலையானதும், எதிரிகளுக்கு அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு நகல்கள் வழங்கிய பின்பு, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவிய போது, எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்கள். இருதரப்பும் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால், 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324 ன் கீழும், 2 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 342 ன் படியும் குற்றச்சாட்டுகள் வனைந்து படித்துக் காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்டபோது, எதிரி மீண்டும் குற்றங்களை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

5. கடந்த 09.08.2022 ம் தேதி காலை 11.00 மணியளவில் ஊத்தங்கரை சென்னப்பநாய்க்கனூர் கிராமம் பிள்ளையார் கோவில் அருகில் சாட்சி 1 மாயக்கண்ணன் என்பவரை எதிரிகள் அனைவரும் நிலப்பிரச்சனை சம்மந்தமான முன்விரோதம் காரணமாக டே தேவிடியா கண்டாரஓலி மகனே என கெட்டவார்த்தையால் திட்டியும் மேற்படி எதிரிகள் தங்கராஜ்,ரவி, தம்பிதுரை ஆகிய மூவரும் சாட்சி 1 மாயக்கண்ணன்என்பவரை நகரவிடாமல் பிடித்து கொள்ள 1ம் எதரி பொன்னுராஜ் சூரிகத்தியால் சாட்சி 1 மாயக்கண்ணனின் நெற்றியில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாக பட்டியல் சாட்சி –8 குட்டியப்பன் கடந்த 09.08.2022 ம் தேதி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக இருந்த திரு.குட்டியப்பன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் கிடைக்கப் பெற்ற தகவலைப் பெற்று மருத்துமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மாயக்கண்ணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 373/2022 ஆக பதிவு செய்து சட்டபிரிவுகள் 294(b), 342, 324 இதச ஆக முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்து பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு கொண்ட உதவி ஆய்வாளர் அன்றைய தினமே 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரஞ்சித் மற்றும் வினோத் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும் பின்னர் சாட்சிகள் மாயக்கண்ணன், வேடியப்பன், ரவிக்குமார், சேட்டு, ரஞ்சித், வினோத் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் எதிரிகள் நால்வரையும்

கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் பின்னர் காயப்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.தங்கராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றும் பின்னர் வழக்கின் புலன் விசாணையை முடித்து 10.09.2022 ம் தேதி எதிரிகளுக்கு எதிராக சட்டபிரிவு 294(b), 342, 324 இதச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக அரசு தரப்பு வழக்கில் உள்ளது.

<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:–</u>

6. அரசுத்தரப்பில் நடந்த சம்பவம் பற்றியும், எதிரி தன்னை கெட்டவார்த்தையால் திட்டி அடித்தது பற்றியும் தனக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றியும் சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தது பற்றியும் அ.சா.1 மாயக்கண்ணன் என்பவர் விசாரிக்கப்பட்டு அவர் மூலம் புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகவும், சமாதானமனு அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.2 வேடியப்பன் என்பவர் வாதியின் உறவினர் ஆவார். சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 ரவிக்குமார் என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 சேட்டு என்பவர் வாதியின் உறவினர் ஆவார். சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.5 ரஞ்சித் என்பவர் பார்வைமகஜர் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தது பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கும் அ.சா.6 செண்பகவள்ளி சிறப்பு காவல்

உதவி ஆய்வாளர் கடந்த 09.08.2022 ம் தேதி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக இருந்த திரு.குட்டியப்பன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் கிடைக்கப் பெற்ற தகவலைப் பெற்று மருத்துமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மாயக்கண்ணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 373/2022 ஆக பதிவு செய்து சட்டபிரிவுகள் 294(b), 342, 324 இதச ஆக முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்து பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு கொண்ட உதவி ஆய்வாளர் அன்றைய தினமே 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரஞ்சித் மற்றும் வினோத் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும் பின்னர் சாட்சிகள் மாயக்கண்ணன், வேடியப்பன், ரவிக்குமார், சேட்டு, ரஞ்சித், வினோத் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் எதிரிகள் நால்வரையும் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் பின்னர் காயப்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.தங்கராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் அவர் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரியை கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

7. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு எதிராக அமைந்துள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313 (1)

(ஆ) பிரிவின் கீழ் வினவிய போது, அவற்றை எதிரி மறுத்துள்ளார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. இருதரப்பும்கேட்கப்பட்டது.

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினை:–</u>**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324 ன் கீழும், 2 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 342 ன் படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>வாதுரைகள்:–</u>**

9. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அலுவலக சாட்சி எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதிடும் போது அரசுத்தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும், வேண்டுமென்றே ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும், அரசுத்தரப்பில் சம்பவ சாட்சி மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளனர் என்றும், எனவே அரசுத் தரப்பில் எதிரியின் மீதான குற்றச்செயல்கள் நிரூபிக்கப்படாததால் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**<u>சாட்சியங்களின் மதிப்பீட்டல்:–</u>**

11. இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலணை செய்தபோது வழக்கின் சம்பவம் பற்றி கூறக்கூடிய சாட்சி அ.சா.1 மாயக்கண்ணன் இந்த வழக்கை தீர்மானிக்கும் முக்கிய சாட்சியாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே, அ.சா.1 மாயக்கண்ணன் சாட்சியத்தினை கண்ணுற்றபோது, அ.சா.1 மாயக்கண்ணன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் சென்னப்ப நாயக்கனுக்கு குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரிகளைத் தெரியும் தனக்கு உறவினர்கள் என்றும் தாங்களும் எதிரிகளும் தங்களுக்குள் பேசி சமாதானம் ஆகிவிட்டோம் என்றும் தற்போது தங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் தன்னிடம் காட்டப்டும் அ.சா.ஆ.2 சமாதான மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 மாயக்கண்ணனின் சாட்சியம் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 வேடியப்பன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் சின்னப்பநாயக்கன்பட்டியில் குடியிருந்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன் என்றும் அ.சா.1 மாயக்கண்ணன் தன்னுடைய மகன் என்றும் ஆஜர் எதிரி தனக்கு மாமன் முறை என்றும் தற்போது எதிரிகளும் தாங்களும் எங்களுக்குள் பேசி சமாதானமாகிவிட்டோம் என்றும் தற்போது எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றும் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க தேவையில்லை என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட

கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.2 வேடியப்பனின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ரவிக்குமார் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் சின்னப்பநாயக்னுரில் குடியிருந்து கூலி செய்து வருகிறேன் என்றும் அ.சா.1 மாயக்கண்ணன் தன்னுடைய அண்ணன் என்றும் அ.சா.2 வேடியப்பன் தன்னுடைய அப்பா என்றும் ஆஜர் எதிரிகள் தனக்கு மாமன் முறை என்றும் தற்போது எதிரிகளும் தாங்களும் எங்களுக்குள் பேசி சமாதானமாகிவிட்டோம் என்றும் தற்போது தங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றும் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க தேவையில்லை என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.3 ரவிக்குமாரின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 சேட்டு தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் சென்னையில் குடியிருந்து கட்டிட வேலை சென்னப்ப நாயக்கனூரில் இப்படி இருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன் என்றும் எதிரிகளை தெரியும் உறவினர்கள் தான் வழக்கின் புகார்தாரரை தெரியும் அவரும் உறவினர் தான் என்றும் இருவரும் சமாதானம் ஆகி விட்டார்கள் என்றும் வழக்கு சம்பவம் குறித்து தனக்கு நேரடியாக தெரியாது என்றும் போலீசார் விசாரிக்கவில்லை

என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.4 சேட்டுவின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.5 ரஞ்சித் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் சென்னப்ப நாயக்கனூரில் குடியிருந்து கிணறு வெட்டும் தொழில் செய்து வருகிறேன் என்றும் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் எங்கு வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை என்றும் போலீசார் கேட்டதால் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும் போலீசார் வழக்கு சம்பந்தமாக தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.5 ரஞ்சித்தின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. இவ்வழக்கில் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கும் அ.சா.6 திருமதி.செண்பகவள்ளி கடந்த 09.08.2022 ம் தேதி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக இருந்த திரு.குட்டியப்பன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது

ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் கிடைக்கப் பெற்ற தகவலைப் பெற்று மருத்துமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மாயக்கண்ணன் என்பவரிடம் அ.சா.ஆ.4 புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 373/2022 ஆக பதிவு செய்து சட்டபிரிவுகள் 294(b), 342, 324 இதச ஆக அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்து பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு கொண்ட உதவி ஆய்வாளர் அன்றைய தினமே 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரஞ்சித் மற்றும் வினோத் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்தும் பின்னர் சாட்சிகள் மாயக்கண்ணன், வேடியப்பன், ரவிக்குமார், சேட்டு, ரஞ்சித், வினோத் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் எதிரிகள் நால்வரையும் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் பின்னர் காயப்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.தங்கராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.8 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.9 காயச்சான்று பெற்றும் பின்னர் வழக்கின் புலன் விசாணையை முடித்து 10.09.2022 ம் தேதி எதிரிகளுக்கு எதிராக சட்டபிரிவு 294(b), 342, 324 இதச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

17. இவ்வழக்கில் சம்பவம் பற்றி புகார் வாக்குமூலம் கொடுத்த புகார்தாரர், கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் பார்வைமகஜர் சாட்சி ஆகியோர் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் மேற்கொண்டு வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி மற்ற அனைத்து பட்டியல் சாட்சிகளையும் நீக்கரவு செய்துவிட்டு

இந்த வழக்கில் அ.சா.1 மாயக்கண்ணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, இவ்வழக்கினை பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த பட்டியல் சாட்சி–8 குட்டியப்பன் காவல் உதவி ஆய்வாளர் என்பவரின் கையெழுத்து நன்கு பரிச்சயம் ஆன அ.சா.6 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செண்பகவள்ளளி என்பவரை விசாரித்து வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து, அரசுத்தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசுத்தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

18. மேற்கண்டவாறு அரசுத்தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 சாட்சியின் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது, எதிரிகள் அ.சா.1 மாயக்கண்ணனை கெட்டவார்த்தையால் திட்டவோ, அடித்து காயப்படுத்தவோ, நகரவிடாமல் பிடித்து நிறுத்தவோ இல்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகின்றது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன்விசாரணை மேற்கொண்டது பற்றி அ.சா.6 செண்பகவள்ளி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சாட்சியம் அளித்திருந்தாலும், அரசுத்தரப்பில் எதிரிகளை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்கக்கூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக இல்லாததாலும், எதிரி தான் புகார்தாரரான அ.சா.1 மாயக்கண்ணனை கெட்டவார்த்தையால் திட்டவோ, அடித்து காயப்படுத்தவோ, நகரவிடாமல் தடுத்ததாக நிரூபிக்கப்படாததாலும், இவ்வழக்கில் சம்பவ சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கினை ஆதரிக்கும் வண்ணம் சாட்சியமளிக்காததாலும், எதிரிகள் மீதான குற்றச்செயல்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது.

19. முடிவாக 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324ன் கீழும், 2 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 342 –ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகளிடமிருந்து பெற்ற பிணையமானது மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு தானாகவே முறிந்துவிடும் என உத்தரவிடப்படுகிறது.

20. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துக்கள் பற்றிய உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜீலை மாதம் 10–ம் நாள் என்னால் திறந்த இந்த நீதிமன்ற அவையில் அவையறிய பகரப்பட்டது.

D SARAVANAN
Judicial Magistrate
Digitally signed by D SARAVANAN
Location: Uthangarai

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

1) அ.சா.1 – மாயக்கண்ணன்

2) அ.சா.2 –வேடியப்பன்

3) அ.சா.3 –ரவிக்குமார்

4) அ.சா.4 –சேட்டு

5) அ.சா.5 –ரஞ்சித்

6) அ.சா.6– செண்பகவள்ளி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்.

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

1) அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1 ன் கையொப்பம்

2) அ.சா.ஆ.2 – சமாதானமனு

3) அ.சா.ஆ.3 – பார்வைமகஜரிலுள்ள அ.சா.5 ன் முதலாவது கையொப்பம்

4) அ.சா.ஆ.4 – புகார் வாக்குமூலம்

5) அ.சா.ஆ.5 – முதல் தகவல் அறிக்கை

6) அ.சா.ஆ.6 – பார்வைமகஜர்

7) அ.சா.ஆ.7 – மாதிரிவரைபடம்

8) அ.சா.ஆ.8 –விபத்து பதிவேடு

9) அ.சா.ஆ.9 – காயச்சான்றிதழ்

**அரசு தரப்பு சான்றுபொருள் :–இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை**

D SARAVANAN Judicial Magistrate Digitally signed by D SARAVANAN Location: Uthangarai

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**பின்குறிப்பு:–**

1. எதிரிகள் பிணையில் இருந்து முன்னிலையானார்கள்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தப்படவில்லை.
3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**நகல்:**

கிருஷ்ணகிரி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

D SARAVANAN Judicial Magistrate Digitally signed by D SARAVANAN Location: Uthangarai